4. விதி 110–ன்கீழ் அறிக்கைகள்

(அ) சென்னை, கெல்லீஸ் கூர்நோக்கு இல்லத்திற்குப் புதிய கட்டடம், முதியோர் இல்லங்களுக்கான உணவூட்டு மானியம் உயர்வு, சேவை இல்லங்கள் மற்றும் அரசு நலத் திட்டங்களின்கீழ் பயன்பெற ஆண்டு வருமான உச்சவரம்பை உயர்த்துதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கைகள் அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.*

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலத் துறை சார்பில் பின்வரும் அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

1. சட்டத்திற்கு முரணாகச் செயல்பட்டதால் இளைஞர் நீதிக் குழுமங்கள் முன் விசாரணைக்குட்படுத்தப்பட்டு, பிணையில் விடுவிக்கப்படாத நிகழ்வுகளில், அச்சிறார்களைத் தற்காலிகமாக தங்க வைக்கும்பொருட்டு, கூர்நோக்கு இல்லங்கள் செயல்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் தற்போது அரசால் 6 கூர்நோக்கு இல்லங்களும், தன்னார்வத் தொண்டு நிறுவனத்தால் 1 கூர்நோக்கு இல்லமும் நடத்தப்பட்டு வருகின்றன.

சென்னை கெல்லீஸ் சிறுவர்களுக்கான கூர்நோக்கு இல்லக் கட்டடம் பழுதடைந்துள்ள காரணத்தினால் 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் அனைத்து வசதிகளையும் கொண்ட 1,000 சதுர மீட்டர் பரப்பளவில் ஒரு புதிய கட்டடம் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இக்கட்டடத்தில் தங்கும் அறைகள், சமையலறையுடன்கூடிய உணவு அருந்தும் கூடம், தொழிற்பயிற்சிக் கூடம் மற்றும் வகுப்பறைகள் உள்ளிட்ட சிறார்களை

நல்வழிப்படுத்துவதற்கான அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளும் இருக்கும்.

2. மாநில அரசு நிதியுதவியுடன் தொண்டு நிறுவனங்கள்மூலம் நடத்தப்படும் முதியோர் இல்லங்களில் பயனடையும் முதியோர்களுக்கு வழங்கப்படும் உணவூட்டு மானியம் 300/- ரூபாயிலிருந்து 1,200/- ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

3. சமூக நலத் துறையின்கீழ், சென்னை, கடலூர், தஞ்சாவூர், சேலம், சிவகங்கை, மதுரை, திருநெல்வேலி, பெரம்பலூர் மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்களில் 9 அரசு சேவை இல்லங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்தச் சேவை இல்லங்களில் தங்க ஆண்டு வருமான உச்சவரம்பு 24,000/- ரூபாய் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதேபோன்று, இடைநிலை ஆசிரியைப் பயிற்சிக்கான மாணவியர் சேர்க்கை மற்றும் சத்தியவாணிமுத்து அம்மையார் நினைவு தையல் இயந்திரம் வழங்கும் திட்டம் போன்ற திட்டங்களிலும் குடும்ப ஆண்டு வருமான உச்சவரம்பு 24,000/- ரூபாய் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்தக் குடும்ப ஆண்டு வருமான உச்சவரம்பு 24,000/- ரூபாயிலிருந்து 72,000/- ரூபாயாக உயர்த்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதன் காரணமாக இத்திட்டங்களினால் அதிக பயனாளிகள் பயனடைவர்.

பிற்பகல் 12-50

(ஆ) பார்வையற்றவர்களுக்கு நவீன ஒளிரும் மடக்குக் குச்சிகள் வழங்குதல், காது கேளாமையைப் போக்க முன்னோடித் திட்டம், சிறப்புக் குழந்தைகளுக்கான மாற்றுத் தகவல் பரிமாற்ற முறை திட்டம் செயல்படுத்துதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாற்றுத் திறனாளிகளை மனித சமுதாயத்தின் ஓர் அங்கமாக அனைவரும் அங்கீகரிக்கும்வகையிலும், நாட்டின்

2016 ஆகஸ்ட் 30] [செல்வி ஜெ ஜெயலலிதா]

வளர்ச்சியில் மாற்றுத் திறனாளிகளின் பங்கேற்பினை உறுதி செய்யும்வகையிலும், ஏனைய மக்களுக்கு இணையாக மாற்றுத் திறனாளிகள் வாழும்வண்ணமும் அவர்களுக்கென பல கொள்கைகளை வகுத்தும், திட்டங்களைத் தீட்டியும் எனது தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது. மாற்றுத் திறனாளிகளுக்கு மேலும் பயனளிக்கக்கூடிய பின்வரும் அறிவிப்புகளை இம்மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

1. பார்வையற்ற மாற்றுத் திறனாளிகளுக்கு 2012 ஆம் ஆண்டு முதல் ஒளிரும் மடக்குக் குச்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்த மடக்குக் குச்சிகள்மூலம் மிக அருகிலுள்ள பொருட்களை மட்டுமே அறிந்துகொள்ள இயலும். எனவே, நவீன ஒளிரும் மடக்குக் குச்சிகள் மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்படும். இந்தக் குச்சிகள்மூலம் அவர்கள் அதிக தூரத்திலுள்ள பொருட்களையும் உணர்ந்துகொள்ள இயலும். (மேசையைத் தட்டும் ஒலி) இதன் காரணமாக பார்வையற்ற மாற்றுத் திறனாளிகள் தங்குதடையின்றி பயணிக்க இயலும். இந்த ஆண்டு 5,000 பயனாளிகளுக்கு நவீன ஒளிரும் மடக்குக் குச்சிகள் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் திட்டம் 1 கோடியே 58 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

2. காது கேளாமையை தொடக்க நிலையிலேயே கண்டறிந்தால் இந்தக் குறைபாட்டை நீக்கிட இயலும். எனவே, இதற்கென ஒரு முன்னோடித் திட்டம் இந்த ஆண்டு செயல்படுத்தப்படும். காது கேளாத குழந்தைகள் சென்னை மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் அதிகளவில் உள்ளனர். எனவே, இந்த மாவட்டங்களில் குழந்தை பிறந்தவுடன் ஒரு சிறப்புப் பரிசோதனைத் திட்டம் செயல்படுத்தப்படும். சென்னையில் 11 மாநகர தாய்-சேய் நல மருத்துவமனைகளில் இத்திட்டம் செயல்படுத்தப்படும். சிவகங்கை மாவட்டத் தலைமை மருத்துவமனை, வட்டார மருத்துவமனை மற்றும் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டம் 3 கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2016 ஆகஸ்ட் 30

3. புற உலக சிந்தனையற்றோர், மூளை முடக்குவாதம், நுண்ணறிவுத் திறன் மற்றும் மரபுவழி குறைபாட்டினால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் பேச்சு மற்றும் மொழித் திறனை மேம்படுத்திடும்வகையில் மாற்றுத் தகவல் பரிமாற்ற முறை செயல்படுத்தப்படும். இத்தகைய சிறப்புக் குழந்தைகள், படங்கள் மற்றும் இதர மாறுபட்ட முறைகளில் மற்றவர்களுடன் கலந்துரையாட பயிற்சி அளிக்கப்படும். இத்திட்டத்தின்படி தொடு திரையுடன் "ஆவாஸ்" AAVAAZ *என்னும் சிறப்பு மென்பொருளுடன்கூடிய கையடக்கக் கணினி* i-Pad *மூலம் சிறப்புக் குழந்தைகளிடமுள்ள தகவல் பரிமாற்றக் குறைபாடு களையப்படும். மேலும், சிறப்புக் குழந்தைகள் வகுப்பறையில் துடிப்புடனும், மிகவும் திறமையுடனும் கல்வி கற்கவும், மற்றவர்களுடன் உரையாடவும் இத்திட்டம் பயனளிக்கும். முதல்கட்டமாக இந்தச் சிறப்பு வசதிகள் ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் (மேசையைத் தட்டும் ஒலி) ஆரம்ப நிலை பயிற்சி மையங்கள் நடமாடும் சிகிச்சைப் பிரிவுகள்மூலம் பயனடையும் குழந்தைகள் மற்றும் சிறப்புப் பள்ளிகளில் பயிலும் 416 குழந்தைகளுக்கு வழங்கப்படும். எனது தலைமையிலான அரசின் இந்த நடவடிக்கைகள் மாற்றுத் திறனாளிகளின் வாழ்வில் மறுமலர்ச்சியை ஏற்படுத்த வழிவகுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

பிற்பகல் 12-55

(இ) ஆவடி, சென்னை, பருத்திப்பட்டு ஏரியை மேம்படுத்துதல், தண்டையார்பேட்டை, கொருக்குப்பேட்டையில் 'அம்மா சுற்றுச்சூழல் பூங்கா' அமைத்தல், ஈரோடு மாவட்டம், பெரியகுளம் ஏரியைப் புனரமைத்தல், ஈரோடு, முத்தம்பாளையம் ஏரியை மேம்படுத்துதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுச்சூழல் துறை குறித்த பின்வரும் அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன்.*

1. இயற்கை எழிலோடுகூடிய ஏரிகள் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்வதுடன், நிலத்தடி நீர் பாதுகாக்கவும் பயன்படுகின்றன.

2016 ஆகஸ்ட் 30] [செல்வி ஜெ ஜெயலலிதா]

எனவே, ஏரிகளைப் பாதுகாக்கவும், புனரமைக்கவும் தேவையான நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு எடுத்து வருகிறது.

சென்னை பெருநகரம், ஆவடி நகராட்சியின் எல்லையில் 87.06 ஏக்கர் பரப்பளவில் பருத்திப்பட்டு ஏரி அமைந்துள்ளது. இந்த ஏரியிலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி இது மேம்படுத்தப்படும். இந்த ஏரியில் தூர் வாருதல், நீர்வரத்து வாய்க்காலை மேம்படுத்துதல், நீரியல் தரத்தைச் சீராக்குதல் போன்ற பணிகள் 28 கோடியே 16 இலட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) பறவைகள் வந்து செல்வதற்கு ஏற்ற இயற்கைச் சூழலுடன்கூடிய தீவுகள் ஏற்படுத்தப்படும்.

2. சுற்றுச்சூழல் தொடர்பான விழிப்புணர்வை குழந்தைகள், பள்ளி மாணவர்கள், இளைஞர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோரிடம் ஏற்படுத்தும் வகையில் தண்டையார்பேட்டையில் கோக்ரேன் பேசின் ரோடு, கொருக்குப்பேட்டையில் 50,110 சதுர அடி அளவுள்ள நிலத்தினை மேம்படுத்தி புல்வெளி, நடைபாதை, சிறுவர் பூங்கா, விளையாட்டுத் திடல் மற்றும் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு பதாகைகள் போன்ற வசதிகள் உள்ளடக்கிய 'அம்மா சுற்றுச்சூழல் பூங்கா' ஒன்று 2 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

3. ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், வடமுகம் வெள்ளோடு கிராமத்தில் உள்ள பெரியகுளம் ஏரி, வெள்ளோடு பறவைகள் சரணாலயம் என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தச் சரணாலயத்திற்குச் சுமார் 146 வகையான உள்ளூர் மற்றும் வெளிநாட்டுப் பறவைகள் வருகை புரிகின்றன. கடந்த பிப்ரவரி மாதம் பறவைகள் கணக்கெடுப்பு செய்யப்பட்டதில் 37 வகையான நீர்வாழ் பறவைகள், 57 வகையான நிலவாழ் பறவைகள் என மொத்தம் 24,427 பறவைகள் இருப்பது தெரிய வந்தது. வெள்ளோடு பறவைகள் சரணாலயம் அமைந்துள்ள பெரியகுளம் ஏரி புனரமைக்கப்படும். இதனால் ஏரியின் உள் பகுதியில் பறவைகளுக்குத் தேவையான நீர்ப்பிடிப்புப் பகுதி கூடுதலாகும். ஏரி தூர் வாரப்பட்டு அழகுபடுத்தப்படுவதோடு, கரையைச் சுற்றி நடைபாதை அமைக்கப்படும். மேலும், மண்திட்டு அமைத்து மரங்கள் நடப்பட்டு, பறவைகள் தங்குவதற்கு வசதிகள்

செய்யப்படும். இந்தப் பணிகள் 4 கோடியே 90 இலட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

4. ஈரோடு மாநகராட்சியில் அமைந்துள்ள முத்தம்பாளையம் ஏரி தூர்வாரும் பணி, நீர்வரத்து வாய்க்கால் மேம்படுத்தும் பணி போன்ற பணிகள் 2 கோடியே 75 இலட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதன்மூலம் ஒரு சுகாதாரமான சூழல் ஏற்படுவதுடன் நீர் ஆதாரமும் பெருகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஈ) சென்னை, உயர் நீதிமன்ற அரசு கிளை அச்சகத்திற்குப் புதிய வெப் ஆப்செட் இயந்திரம் வாங்குதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரை, நிதிநிலை அறிக்கை, சட்டமன்ற நடவடிக்கைக் குறிப்புகள், கொள்கை விளக்கக் குறிப்புகள், குறிப்பேடுகள், கையேடுகள், அரசிதழ்கள், அரசு நாட்காட்டிகள் உள்பட அரசுக்குத் தேவையான அனைத்து அச்சுத் தேவைகளையும் பூர்த்தி செய்யும் பணியை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை செவ்வனே மேற்கொண்டு வருகிறது.

அரசு அச்சகங்களின் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் புதிய இயந்திரம் கொள்முதல் பணிகள் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

பிற்பகல் 1-00

சென்னையிலுள்ள உயர் நீதிமன்றத்தின் அச்சுத் தேவைகளை நிறைவு செய்யும் நோக்குடன், 1923 ஆம் ஆண்டு முதல் உயர் நீதிமன்ற வளாகத்தில் அரசு கிளை அச்சகம் செயல்பட்டு வருகிறது. இந்த அச்சகத்தில் உயர் நீதிமன்றத்தால் நாள்தோறும் வெளியிடப்படும் உயர் நீதிமன்ற வழக்குப் பட்டியல்கள், வார மற்றும் மாத வழக்குப் பட்டியல்கள், உயர் நீதிமன்ற பயன்பாட்டிற்குத் தேவையான 708 வகையான படிவங்கள் மற்றும் பதிவேடுகள் அச்சிடப்பட்டு வருகின்றன. இங்கு, தற்போது பயன்பாட்டிலுள்ள "வெப் ஆப்செட்" இயந்திரம் 25 வருடங்களுக்கு முன்பு கொள்முதல் செய்யப்பட்ட இயந்திரம் என்பதால், அன்றாடப் பணிகளைக் குறித்த நேரத்தில் முடிப்பதில் சிரமம் ஏற்படுகிறது. தினந்தோறும் மாலையில் பெறப்படும் சுமார்